இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

விசேட தேவைகள்சார் கல்வித்துறை

சிறப்புக் கல்விமாணி (விசேட தேவைகள்சார் கல்வி) நிகழ்ச்சித் திட்டம் - 2020/2021

SNU5244/ESU3144- கலைத்திட்ட கொள்கையும் நடைமுறையும்

இறுதிப் பரீட்சை - 2021

பகுதி - I இன் அனைத்து வினாக்களுக்கும் பகுதி - II இல் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 14.08.2021 நேரம் : பி.ப 01.30 - பி.ப 04.30

## பகுதி I

1. கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டம் என்பவற்றிற்கு இடையிலான வேறுபாட்டை விளக்குக.

2. 'கிடையான' மற்றும் 'நிலைக்குத்தான' கலைத்திட்ட ஒன்றிணைப்பினை வேறுபடுத்துக.

3. கலைத்திட்ட கற்கையானது ஆசிரியர்களுக்கு முக்கியமானது என்பதைக் காட்டுவதற்கான காரணங்கள் நான்கைக் (04) குறிப்பிடுக.

4. கலைத்திட்ட அபிவிருத்திக் கோடபாடுகளின் முக்கியத்துவத்தினை சுருக்கமாக ஆராய்க.

5. 1932 இல் ' ஹந்தஸ்ஸ கல்வி முறை' இனை அறிமுகப்படுத்தியதன் நோக்கங்கள் யாவை?

6. கலைத்திடட மதிப்பீட்டாளரிடம் இருக்கவேண்டிய குணவியல்புகள் ஐந்தைக் (05) குறிப்பிடுக.

7. பாடசாலை கலைத்திட்டத்தினை அமுல்படுத்துகையில் ஆசிரியரின் வகிபங்கு இரண்டினை (02) சுருக்கமாக ஆராய்க.

8. கற்றல் அனுபவம் ஒன்றில் உள்ள இயல்புகள் ஐந்தை (05) பட்டியற்படுத்துக.

(08 x 05 = 40 புள்ளிகள்)

# பகுதி II

9.

i. "கலைத்திட்டம்" எனும் பதத்திற்கான ஏற்றுக் கொள்ளப்பட்ட இரண்டு (02) வரைவிலக்கணங்களைக் குறிப்பிடுக.

(08 புள்ளிகள்)

ii. இவ்வரைவிலக்கணங்களின் அடிப்படையில் கலைத்திட்டத்தில் அடங்க வேண்டிய அம்சங்கள் நான்கை (04) இணங்காண்க.

(06 புள்ளிகள்)

iii. மேலே குறிப்பிட்ட அம்சங்களைக் கவனத்திற் கொண்டு "கலைத்திட்டம்" எனும் பதத்திற்கான உங்களின் வரைவிலக்கணத்தை கட்டியெழுப்புக.

(06 புள்ளிகள்)

10.

i. கலைத்திட்ட இலக்குகள் மற்றும் நோக்கங்களை தீர்மானிக்கும் பிரமாணங்களைக் குறிப்பிட்டு உதாரணங்கள் மூலம் விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. இலக்குகள் மற்றும் நோக்கங்கள், குறிப்பான நோக்கங்கள் மற்றும் குறிப்பான நடத்தைசார் நோக்கங்களுக்கிடையேயான தொடர்பை உதாரணங்கள் மூலம் எடுத்துக் காட்டுக.

(10 புள்ளிகள்)

11.

i. டெய்லரின் கலைத்திட்ட மாதிரியை விளக்குக.

(07 புள்ளிகள்)

ii. டெய்லரின் கலைத்திட்ட மாதிரியின் பலவீனங்களை இணங்கான்க.

(03 புள்ளிகள்)

iii. அப்பலவீனங்களை வீலரின் கலைத்திட்ட மாதிரியினால் எவ்வாறு நீக்கப்பட்டுள்ளதென்பதை பரீட்சிக்க.

(10 புள்ளிகள்)

12.

i. இணைப் பாடவிதான செயற்பாடுகள் என்றால் என்ன என்பதை சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளிகள்)

ii. மாணவர்களின் ஆளுமை விருத்திற்கு இணைப்பாடவிதான செயற்பாடுகளின் முக்கியத்துவத்தினை மதிப்பிடுக.

(08 புள்ளிகள்)

iii. மாணவர்களை பாடசாலையில் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பங்குபற்றுவதற்கு எவ்வாறு ஊக்குவிக்கலாம் என்பதை விளக்குக.

(08 புள்ளிகள்)

13.

i. கலைத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கலைத்திட்ட மதிப்பீடு என்பவற்றினை வேறுபடுத்துக.

(04 புள்ளிகள்)

ii. கலைத்திட்ட முகாமைத்துவத்தில் அதிபரின் வகிபங்கினை பரீட்சிக்க.

(08 புள்ளிகள்)

iii. குறைந்தது இரண்டு (02) உதாரணங்களை எடுத்துரைத்து "பாடசாலை அடிப்படையிலான முகாமைத்துவம்" இன் முக்கியத்துவத்தினை மதிப்பிடுக.

(08 புள்ளிகள்)

14.

i. பாடசாலை கலைத்திட்ட ஒழுங்கமைத்தலில் பெரும்பாலும் பயன்படுத்தக்கூடிய அணுகுமுறைகள் நான்கினை (04) பெயரிடுக.

(04 புள்ளிகள்)

ii. மேலும் ஏதாவதொரு அணுகுமுறையின் தன்மைகள், சிறப்பான இயல்புகள், முக்கியத்துவம் மற்றும் பாலினங்களை ஆராய்க.

(08 புள்ளிகள்)

iii. இலங்கை பாடசாலை கலைத்திட்ட ஒழுங்கமைக்கையில்பயன்படுத்தப்படும் கலைத்திட்ட ஒழுங்கமைப்பு அணுகுமுறையினை பரீட்சிக்க.

(08 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*